# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 160 — 1975 අප්‍රේල් 18 වැනි සිකුරාදා — 1975.04.18

160 ம் இலக்கம்—1975 ம் ஆண்டு எப்பிறல் மாதம் 18 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV — உள்ளூராட்சி

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் .. .. .. | 129 | வரவு செலவுக் கூற்றுக்கள் .. .. .. .. | — |
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. .. | 131 | வரவு செலவுத் திரட்டுகள் .. .. .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும், பிறவும் .. .. | — | ஆதன விற்பனைகள் .. .. .. .. | — |
| துணை விதிகள் .. .. .. .. | 134 | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் .. .. .. | — |
| உள்ளூராட்சி அதிகார நிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் .. .. .. .. | — | நானாவித அறிவித்தல்கள் .. .. .. ... | 139 |


**கவனிக்க.**—தெங்கு அபிவிருத்தி (திருத்தம்) சட்டமூலமும் மகாவலி அபிவிருத்திச் சபை (திருத்தம்) சட்டமூலமும் 1975 ஆம் ஆண்டு எப்பிறல் மாதம் 11 ஆந் தேதிய இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பிகளாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

## உள்ளூராட்சி அறிவித்தல்கள்

### இறைச்சிக் கடைக்காரர் கட்டளைச்சட்டம்

(272 ஆம் அத்தியாயமான) இறைச்சிக் கடைக்காரர் கட்டளைச் சட்டத்தின் 27 ஆம் பிரிவின் கீழ் அதற்கான தக்க அதிகாரியினால் அதாவது சாவகச்சேரி நகர சபையினால் ஆக்கப்பட்டு, அப் பிரிவினால் தமக் குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக்கொண்டு அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் உறுதிப்படுத்தப்பட்ட ஒழுங்கு விதி.

டீ. இராசேந்திரா,  
மேலதிகச் செயலாளர்,  
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,  
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,  
1975 ம் ஆண்டு எப்பிரல் மீ 3 ந் உ.

### ஒழுங்குவிதி

யூன் 8, 1956 ன் 10,939 ம் இலக்கக் கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள், அவற்றின் 11 (1) ம் ஒழுங்குவிதியில் அதற்கான அட்டவணைக்குப் பதிலாக இதில் தரப்பட்ட கட்டணங்களின் புதிய அட்டவணையை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றன.

| | ரூபா. |
|---|---|
| மாடுகளுக்கு தலைக்கு .. .. .. | 5 00 |
| செம்மறி ஆடுகளுக்கு அல்லது வெள்ளாடுகளுக்கு தலைக்கு .. | 1·00 |

4–350—18.04.75 ந் திகதிய வர்த்தமானி இல. 160

---

### பாணந்துறை நகரசபை

*நகரசபைகள்ச் கட்டளைச்சட்டம்*

(255 ஆம் அத்தியாயமான) நகரசபைகள் கட்டளைச்சட்டத்தின் 160 ஆம் பிரிவின் கீழும், அப்பிரிவினால் தமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வழங்கிய அங்கீகாரத்துடனும் சபையினால் விதிக்கப்படக்கூடிய வரையறைகளுக்கும் தன்கமைகளுக்கும், நிபந்தனைகளுக்கும் அமைவாகவும் பாணந்துறைப் பட்டினத்திலுள்ளமைந்துள்ள நெல் வயல்கள் தவிர்ந்த ஆதனங்கள் அனைத்தினதும் வருடாந்தப் பெறுமதியின், நூற்றுக்கு இருபது வீதமானதும் முறையே மார்ச்சு 31, யூன் 30, செத்தெம்பர் 30, திசெம்பர் 31 ஆகிய திகதிகளில் நான்கு தவணைகளில் சமதொகைகளாகச் செலுத்தப்படற்பாலதுமான ஒரு வரியை 1975 ஆம் ஆண்டுக்கு பாணந்துறை நகரசபை விதித்திருக்கின்றதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

டீ. இராசேந்திரா,  
மேலதிகச் செயலாளர்,  
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,  
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு, 1975 ந் ஆண்டு மார்ச்சு மீ 31 ந் உ.

4–349—18.04.75 ந் திகதிய வர்த்தமானி இல. 160

---

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

*எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்குத் திருப்பி அனுப்பிவைக்கப்படும்.*

*எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,*  
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*  
*கொழும்பு,*  
*1972 ம் ஆண்டு மே மீ 05 ந் உ.*

**பண்டாரவளைப் பட்டினம்**

*நகரசபைகள் கட்டளைச்சட்டம்*

**1975 ஆம் ஆண்டுக்கான விசேட தண்ணீர் வரி**

(255 ஆம் அத்தியாயமான) நகரசபைகள் கட்டளைச்சட்டத்தின் 130 (ஆ) என்னும் பிரிவின்கீழும் அவருக்குக் கையளிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு உள்ளூராட்சி ஆணையாளரினுற் கொடுக்கப்பட்ட அங்கீகாரத்துடனும் துணைவிதிகளினுல் விதிக்கப்படக்கூடியவாறுன அத்தகைய வரையறைகளுக்கும் விலக்களிப்புகளுக்கும் அமைவாக பண்டாரவளைப் பட்டினத்தினுள் அமைந்துள்ள அசைவற்ற ஆதனங்கள் அனைத்தினதும் வருடாந்தப் பெறுதிமதியின் நூற்றுக்கு ஏழு வீதமானதும் முறையே மார்ச்சு 31, யூன் 30, செத்தெம்பர் 30, திசெம்பர் 31 ஆகிய திகதிகளில் நான்கு தவணைகளில் சமதொகைகளாகச் செலுத்தப்படற்பாலதுமான ஒரு விசேட தண்ணீர் வரியை 1975 ஆம் ஆண்டுக்கு பண்டாரவளைப் பட்டினத்தின் விசேட ஆணையாளர் விதித்துள்ளாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

டபிள்யூ. ஈ. வீ. எஸ். த. அல்விஸ்,
உள்ளூராட்சி ஆணையாளர்.

கொழும்பு, 1975 ம் ஆண்டு மார்ச்சு மீ 05 ந் உ.

4–375—18.04.75 ந் திகதிய வர்த்தமானி இல.160

---

**தலவாக்கொல்லை–லிந்துலை நகரசபை**

*நகரசபைகள் கட்டளைச்சட்டம்*

**1975 ஆம் ஆண்டுக்கான விசேட தண்ணீர் வரி**

(255 ஆம் அத்தியாயமான) நகரசபைகள் கட்டளைச்சட்டத்தின் 130 (ஆ) என்னும் பிரிவின்கீழும் அவருக்குக் கையளிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு உள்ளூராட்சி ஆணையாளரினுற் கொடுக்கப்பட்ட அங்கீகாரத்துடனும் துணைவிதிகளினுல் விதிக்கப்படக்கூடியவாறுன அத்தகைய வரையறைகளுக்கும் விலக்களிப்புகளுக்கும் அமைவாக தலவாக்கொல்லை லிந்துலை பட்டினத்தினுள் அமைந்துள்ள அசைவற்ற ஆதனங்கள் அனைத்தினதும் வருடாந்தப் பெறுமதியின் நூற்றுக்கு ஆறு வீதமானதும் முறையே மார்ச்சு 31, யூன், 30, செத்தெம்பர் 30, திசெம்பர் 31 ஆகிய திகதிகளில் நான்கு தவணைகளில் சமதொகைகளாகச் செலுத்தப்படற்பாலதுமான ஒரு விசேட தண்ணீர் வரியை 1975 ஆம் ஆண்டுக்கு தலவாக்கொல்லை–லிந்துலை நகரசபை விதித்துள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

டபிள்யூ. ஈ. வீ. எஸ். த அல்விஸ்,
உள்ளூராட்சி ஆணையாளர்.

கொழும்பு,
1975 ம் ஆண்டு மார்ச்சு மீ 14 ந் உ.

4–352—18.04.75 ந் திகதிய வர்த்தமானி இல. 160

---

**மெதப்பானே கிராமச்சபை**

*களியாட்டவரிக் கட்டளைச்சட்டம்*

(267 ஆம் அதிகாரமாம்) களியாட்டவரிக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ம் உட்பிரிவின்கீழ் மெதப்பானே கிராமச்சபையினுல் நிறைவேற்றப்பட்ட பின்வரும் தீர்மானம் அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றமையினுல், அப்பிரிவின் (2) ம் உட்பிரிவின் பிரகாரம் பிரசுரிக்கப்படுகின்றது.

**தீர்மானம்**

சபையின் நிருவாக எல்லைகளுக்குள் நடத்தப்படும் (கட்டளைச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளவாறுன) களியாட்டங்களுக்கான அனுமதிக் கட்டணங்கள் மீது (267 ஆம் அதிகாரமாம்) களியாட்டவரிக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் 1968 யூன் 28 ன் 14,808 ஆம் இலக்கக் கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட தீர்மானத்தின் வாயிலாக அத்தகைய கொடுப்பனவுகள் சம்பந்தமாக விதிக்கப்பட்டு அறவிடப்பட்ட வரிக்குப் பதிலாக இதன் கீழ் காட்டப்பட்டுள்ள விகிதங்களின்படியான ஒரு வரியை இத்தீர்மானம் கசெற்றில் பிரசுரிக்கப்படும் திக்தியிலிருந்து இச்சபை இத்தால் விதித்து அறவிடுகின்றது.

**கட்டணத்தொகை**

வரித்தொகை நீங்கலாக அனுமதிக்கட்டணம் :

| | வரி விகிதம் ரூ. ச. |
|---|---|
| (அ) 20 சதத்துக்கு குறையாமலும் ஆனுல் 50 சதத்துக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து .. .. | 0 5 |
| (ஆ) 50 சதத்துக்கு மேற்படவும் ஆனுல் ஒரு ரூபாவுக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து .. .. | 0 10 |
| (இ) 1 ரூபாவுக்கு மேற்படவும் ஆனுல் 1.50 சதத்துக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து .. .. | 0 15 |
| (ஈ) 1 ரூபா 50 சதத்துக்கு, மேற்படவும் ஆனுல் 2 ரூபாவுக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து .. .. | 0 20 |
| (உ) 2 ரூபாவுக்கு மேற்படவும் ஆனுல் 2 ரூபா 50 சதத்துக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து .. .. | 0 25 |
| (ஊ) 2 ரூபா 50 சதத்துக்கு மேற்படவும் ஆனுல் 3 ரூபாவுக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து .. | 0 30 |
| (எ) 3 ரூபாவுக்கு மேற்படவும் ஆனுல் 4 ரூபாவுக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து .. .. | 0 40 |
| (ஏ) 4 ரூபாவுக்கு மேற்படவும் ஆனுல் 5 ரூபாவுக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து .. .. | 0 50 |
| (ஐ) 5 ரூபாவுக்கு மேற்படவும் ஆனுல் 10 ரூபாவுக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து .. .. | 1 0 |
| (ஒ) 10 ரூபாவுக்கு மேற்படுமிடத்து— | |
| (1) முதல் 10 ரூபாவுக்கு .. .. | 1 0 |
| (2) மேலதிக ஒவ்வொரு 5 ரூபாவுக்கு அல்லது அதன் பகுதிக்கு .. .. | 1 0 |

டி. ராஜேந்திரா,
மேலதிகச் செயலாளர்,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு, 25.03.75.

4–388—18.04.75 ந் திகதிய வர்த்தமானி இல. 160

## பதவிகள் — வெற்றிடம்

"இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை" யின் IV ஆம் பகுதியின் விளம்பரப்படுத்தப்படும் உள்ளூராட்சிச் சேவைப் பதவிகளின் நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள்

படிகள்.—அரசாங்க உத்தியோகத்தர்களுக்குப் பொருந்தும் விகிதங்களுக்கும் நிபந்தனைகளுக்கும் இணங்கத் திருமணப்படி கொடுக்கற்பாலது.

2. சேவைகள் நிபந்தனைகள்.—1969 ம் ஆண்டின் 18 ஆம் இலக்க உள்ளூராட்சிச் சேவை அதிகாரச் சட்டத்திற்கும், உள்ளூராட்சிச் சேவைப் பிரமாணங்களுக்கும், அதிகார சபை காலத்திற்குக் காலம் விதிக்கும் மற்றும் ஏதும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டதாகவே நியமனங்கள் அமையும்.

3. நியமன விதிகள்.—(அ) உ. ஆ. சேவையில் மாதாந்தச் சம்பளம் பெறும் பதவிகளுக்கு நியமிக்கப்படும் சகல உத்தியோகத்தர்களும் உ. ஆ. சே. சகாயநிதிக்கு கட்டுப்பணம் செலுத்த வேண்டும். ஊழியர் தமது திரட்டிய வேதனத்தில் 6 சதவிகிதத்தைச் செலுத்துமாறு வேண்டப்படுவர். ஊழியர் நியமிக்கப்படும் உள்ளூராட்சி மன்றம், அவர் பொருட்டு இந்நிதிக்கு அவரது திரட்டிய வேதனத்தின் 9 சத விகிதத்தைச் செலுத்தும்.

(ஆ) அரசாங்கத்தின் கீழ் சேவையிலிருக்கும் உத்தியோகத்தர்கள் அரசாங்க இளைப்பாற்றுச் சம்பளம் பற்றிய விதிகளின் 21 வது பிரிவின்படி விடுவிக்கப்பட்டு, உள்ளூராட்சிச் சேவையில் இளைப்பாற்றுச் சம்பளத்திற்குரிய பதவிகளுக்கு இடமாற்றப்பட்டால் அவர்களின் இளைப்பாற்றுச் சம்பள உரிமைகள் பாதுகாக்கப்படும். உள்ளூராட்சிச் சேவையில் ஒரு இளைப்பாற்றுச் சம்பளம் பெறும் பதவியை வகிக்கும் எந்தவொரு ஊழியரும் அச் சேவையில் வேறொரு இளைப்பாற்றுச் சம்பளம் பெறும் பதவிக்கு அவர் பதவியுயர்த்தப்பட்டால் அல்லது நியமிக்கப்பட்டால், அவர் நியமிக்கப்பட்ட அல்லது பதவியுயர்த்தப்பட்ட புதிய பதவியிலும் அவர் தொடர்ந்து இளைப்பாற்றுச் சம்பள உரிமைகளைப் பெறுவார்.

(இ) உள்ளூராட்சித் தாபனங்களில் அவற்றின் இளைப்பாற்றுச் சம்பள விதானங்கள் அல்லது விதிகளின் கீழ் இளைப்பாற்றுச் சம்பளத்திற்குரிய பதவிகளை வகிப்பவர்கள், விடயத்தில், அவர்கள் கடைசியாக இளைப்பாறும்போது கொடுக்கப்படும் இளைப்பாற்றுச் சம்பளம், 1969 ம் ஆண்டின் 18 ம் இலக்க உள்ளூராட்சிச் சேவைக் கட்டளைச் சட்டத்தின் கீழ் உள்ளூராட்சிச் சேவைக்கு அவர்கள் மாற்றப்பட்ட திகதிக்கு நேர்முந்தியுள்ள திகதியன்று எந்த உள்ளூராட்சித் தாபனத்தில் வேலை பார்த்தவர்களோ அந்த உள்ளூராட்சித் தாபனத்தின் இளைப்பாற்றுச் சம்பள விதானங்களுக்கு அல்லது விதிகளுக்கு அமைவாக இருக்கும்.

(ஈ) உள்ளூராட்சிச் சேவையில், மாதாந்த வேதனம் பெறும் பதவிகளுக்கு நியமிக்கப்படும் ஊழியர்களுக்கு விதவைகள், அனாதைகள் இளைப்பாற்றுச் சம்பளத்திட்டம் பொருந்தமாட்டாது. எவ்வாறாயினும் பெண்களும் 55 வயதுக்கு மேற்பட்ட உத்தியோகத்தர்களும், உள்ளூராட்சிச் சேவைக்கு நியமிக்கப்படுவதற்கு நேர்முந்திய தேதியில், அரசாங்க சேவையில் இளைப்பாற்றுச் சம்பளம் பெறும் பதவிகளை வகித்தவர்களும் தவிர, உ. ஆ. சேவையில் இளைப்பாற்றுச் சம்பளம் பெறும் பதவி ஒன்றிலிருந்து அச் சேவையில் வேறொரு இளைப்பாற்றுச் சம்பளம் பெறும் பதவிக்கு நியமிக்கப்படுபவர்கள் அல்லது பதவியுயர்த்தப்படுபவர்கள் 1952 ம் ஆண்டு ஜூலை 30 ந் திகதி வெளியான 10,329 இலக்க அரசாங்க விசேட வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட்ட, 1952 ம் ஆண்டின் உள்ளூராட்சிச் சேவை விதவைகள் அனாதைகள் இளைப்பாற்றுச் சம்பள நிதிப்பிரமாணங்களின்படி, ஸ்தாபிக்கப்பட்ட உ. ஆ. சே. விதவைகள், அனாதைகள் இளைப்பாற்றுச் சம்பள நிதிக்கு தங்களது கருதப்படும் அடிப்படைச் சம்பளத்தின் 4 சத விகிதத்தைச் செலுத்த வேண்டும். குறித்த உள்ளூராட்சி மன்றம், கருதப்படும் அடிப்படைச் சம்பளத்தின் 3 சத விகிதத்தைச் செலுத்தும்.

(உ) நியமிக்கப்படுபவர்கள் குறித்த உள்ளூராட்சித் தாபனம் நிர்ணயிக்கும் தொகைக்கும் ரொக்கமாக அல்லது உள்ளூராட்சிச் சேவை அதிகார சபை அங்கீகரிக்கும் உத்தரவாதச் சங்கம் ஒன்றின் மூலமாக நம்பிக்கை உத்தரவாத முறிகொண்டு பிணை செலுத்துமாறு வேண்டப்படலாம்.

(ஊ) உள்ளூராட்சிச் சேவையில் அட்டவணைப்படுத்தப்பட்ட பதவிகளை வகிக்காதவர்களாயிருந்து நியமிக்கப்படுவர்கள் இலங்கையின் எப்பகுதியிலேனும் சேவை செய்வதற்கு வேண்டிய தேக தகுதியுடைமை பற்றி முறையான தகைமை பெற்ற வைத்தியர் ஒருவரின் வைத்திய பரிசோதனையிற் சித்தியெய்துமாறு வேண்டப்படுவர்.

(எ) வேறுவிதம் குறிக்கப்பட்டாலன்றி நியமனம் பொதுவாக மூன்றாண்டு காலத்துக்கு தகுதிகாண் நிலையில் இருக்கும். அல்லது மூன்றாண்டு காலத்துக்குப் பின்னர் உறுதிப்படுத்துவதற்கு அமைவானதாக இருக்கும்.

(ஏ) விண்ணப்பதாரர்கள், வேண்டப்படும் நேரத்தில் தங்களுடைய பிறப்புச் சான்றிதழ்களையோ, அல்லது அதற்குப் பதிலாகத் தங்களுடைய உண்மையான வயதைக் குறிக்கும் சான்றிதழ்களையோ காட்டுவதற்கு ஆயத்தமாக இருத்தல் வேண்டும்.

(ஐ) நியமிக்கப்படுபவர்கள் தீவின் எப்பகுதியிலாயினும் சேவை செய்தல் வேண்டும்.

4. உள்ளூராட்சிச் சேவைக்குப் புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள்.—(1) எப்பதவிக்கேனும் நீடியகாலம் விதிக்கப்பட்டாலன்றிச் சந்தர்ப்பத்திற்கேற்ப, இளைப்பாற்றுச் சம்பளமுள்ள பதவிகளில்/இளைப்பாற்றுச் சம்பளமில்லாத பதவிகளில் நியமிக்கப்படும் "புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்களின்" தகுதிகாண் நிலை/பரீட்சார்த்த காலம் மூன்று ஆண்டுகளாக இருக்கும்.

(2) புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையை வினைப்படுத்துவதற்கு ஏதுவாக 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசாங்க மொழிச்சட்ட ஏற்பாடுகளுக்கும் இனிமேல் ஆக்கப்படும் சட்டங்கள், விதிகளுக்கும் அமைந்தொழுகுவார்களென்ற நிபந்தனைகளுக்குட்படல் வேண்டும்.

(3) தமது கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கு அத்தியாவசியமற்ற புறநடையான சந்தர்ப்பங்களில் ஒழிய அவர்கள் தங்களுடைய தகுதிகாண்/பரீட்சைக்கான் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில் கடமை செய்யும் அறிவு பெறல் வேண்டும்.

(4) தகுதிகாண்/பரீட்சைக்கான் காலமுடிவில் அவர்களின் நியமனம் உறுதிப்படுத்துகின்றமை பிறவற்றோடு, குறிப்பிட்ட கால வரையறைக்குள், க. பொ. த. ப. தரத்திற்கு மேற்படாத நிலை வரையுள்ள, விதிக்கப்பட்ட சிங்களத்தேர்ச்சி சோதனைகளில் சித்தியடைவதைப் பொறுத்திருக்கும். குறிக்கப்பட்ட காலத்துள் இத் தேர்ச்சிச் சோதனையில் சித்தியடையத் தவறினால், சோதனைகளில் தேறும்வரை அவர்களுக்குரிய வேதனப் பெருக்கங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தேர்ச்சியடைய வேண்டிய தரத்தை அடையாத உத்தியோகத்தர்களின் சேவைகள், அவர்களின் தகுதிகாண்/பரீட்சைகாண் காலமுடிவில் நிறுத்தப்படலாம்.

(5) கல்வியும் ஏனைய தகைமைகளும்.—சி. பா. த. ப. பரீட்சை அல்லது அதற்குச் சமமான அல்லது உயர்ந்த பரீட்சை ஆகக் குறைந்த தகைமை என்று விதிக்கப்பட்ட எல்லாச் சேர்வுத் திட்டங்களிலும், சிங்கள மொழியில் கல்வி பயின்ற, சிங்களப் பரீட்சார்த்தி சிங்கள பாஷையில் அல்லது அதற்குச் சமமானதில் சிரேஷ்ட பாடசாலைத் தாரதரப் பத்திரம் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

(1963 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 8 ம் திகதிக்கு முன்னர் தொடக்கம் உள்ளூராட்சிச் சேவையிலிருந்துவரும் உத்தியோகத்தர்களுக்கும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள வேறு பதவிகளுக்கு நியமனம் பெறவிரும்புபவர்களுக்கும் இந்தத் தகைமை பொருந்தாது).

குறிப்பு (1).—சிங்களமொழி மூலம் உள்ளூராட்சிச் சேவையில் புகும் தகைமை பெறும் புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள் உறுதிப்படுத்துவதற்கு ஒரு முன் தேவையாக இத்தேர்ச்சி சோதனையில் சித்தியடைவதிலிருந்து விலக்குப்பெறுவர்.

குறிப்பு (2).—இதில் "புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள்" என்பது அரசகரும மொழிக் கொள்கையின் நோக்கத்தின்படி 1960 ம் ஆண்டு ஜனவரி மாதம் 29 ஆம் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் பிரசுரமாகும் விளம்பரங்களின் மூலம் உள்ளூராட்சிச் சேவையிலுள்ள பதவிகளில் நியமிக்கப்படும் உத்தியோகத்தர்களுக்கும் பொருந்தும்.

குறிப்பு (3).—4 (3) ஆம், (4) ஆம் பந்திகளில் உள்ள ஏற்பாடுகள் அரசாங்க அலுவலகங்களில் கடமையாற்றும் முன் சேர்ந்த

உத்தியோகத்தர்களுக்கும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள நியமனங்களை ஏற்பதற்காகப் பதவியிலிருந்து விடுவிக்கப்பட்டவர்களுக்கும் பொருந்தாது.

5. ஒவ்வொரு விண்ணப்பதாரரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்க வேண்டும். " இலங்கையர் " என்பது வம்சாவழியாகவோ பதிவு செய்ததாலோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

6. போர்ப்படையிற் சேவை செய்த முன்னாள் வீரர்களுக்கான சலுகை.—(அ) விண்ணப்பிக்கப்பட்ட பதவிகளுக்கு விதந்துரைக்கப்பட்ட மிகக் கூடிய வயது எல்லைக்குள் தம்மைக் கொண்டுவர உதவும் விதத்தில் தமது வயதுகளிலிருந்து கிரமமான படையிற் தாம் ஆற்றிய சேவையைக் கழிப்பதற்கு, போர்ப்படையிற் சேவை செய்த முன்னாள் வீரர்கள் அனுமதிக்கப்படுவர்.

(ஆ) எந்தப் பதவிகளுக்குமுரிய புதிய நியமனத் திட்டத்தில் விதந்துரைக்கப்பட்ட மிகக் குறைந்த கல்வித் தகைமையிலிருந்து, அடுத்துக் குறைவான பரீட்சையைத் தமது மிகக் குறைந்த கல்வித் தகைமையாகக் கருதுவதற்குப் போர்ப்படை வீரர்கள் அனுமதிக்கப்படுவர்.

7. வயதுச்சலுகை.—இரு வருட தொடர்ச்சியான சேவையுள்ள நிரந்தரப் பதவி வகிக்கும் உள்ளூராட்சி மன்ற ஊழியர்கள் உள்ளூராட்சி சேவையிலுள்ள பதவிகள் விளம்பரப்படுத்தப்படும் பொழுது வயது எவ்வாறிருப்பினும் விண்ணப்பிப்பதற்குத் தகுதியுடையவராவர்.

8. வேண்டற்பால ஏனையவை.—(1) உள்ளூராட்சித் தாபனமொன்றில் கடமையாற்றுபவர்கள் விண்ணப்பங்கள், அவர்கள் கடமையாற்றும் உள்ளூராட்சித் தாபனத்தின் மாநகரசபை ஆணையாளர் அல்லது தலைவர் மூலமாக அனுப்பப்படுதல் வேண்டும்.

(2) அரசாங்க சேவையில் இருக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வப்பகுதிகளின் தலைவர்கள் மூலமாக அனுப்பப்படுதல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர்களுடைய விண்ணப்பங்கள் விடயத்தில், விண்ணப்பகாரர் தெரிவு செய்யப்படின் அவரை விடுதற்குத் தாம் தயாரா ? இல்லையா ? என்பதைத் சம்பந்தப்பட்ட பகுதியின் தலைவர் விண்ணப்பத்தை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

(3) குறிக்கப்படும் ஒரு நேரத்திலும் இடத்திலும், நேர்முகப் பரீட்சைக்கோ, பரீட்சைக்கோ தோற்றுமாறு அபேட்சகர்கள், வேண்டப்படலாம். இதன் பொருட்டு பிரயாணச் செலவுகளோ வேறு செலவுகளோ கொடுக்கப்படமாட்டாது.

(4) அபேட்சகர் ஒருவரைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் ஒரு குணச்சான்றிதழைக் கொடுப்பதன் மூலம் அதனைச் செய்யலாம். அபேட்சகர் ஒருவருக்குச் சாதகமாக ,நேர்முகமாகவேனும் மறைமுகமாகவேனும் எவ்விதமான ஆதரவும் தேடுதலேனும் அபேட்சகர்கள் தேர்ந்தெடுப்பதற்கு எந்தவிதமான முயற்சியும் செய்தலேனும் அவ்வபேட்சகர்களுக்குத் தகைமையின்மையை உண்டாக்கும்.

(5) விண்ணப்பத்தில் உள்ள கூற்றெதுவும் செம்மைபற்றதென்று தெரிவிற்கு முன்னர் காணப்படின் விண்ணப்பதாரருக்கு தகைமையீனத்தை உண்டாக்கும்; தெரிவிற்குப் பின்னர் காணப்படின் அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்குப் பாத்திரராவர்.

(6) இவ்விளம்பரத்தில் வேண்டப்படுவனவற்றுக்கு சகல வகைகளிலும் இணக்கமாயில்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(7) " கீழே இணைக்கப்பட்ட படிவத்தில் " விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு உள்ளூர் ஆட்சிச் சேவை அதிகாரசபை செயலாளருக்கு முகவரி இடப்பட வேண்டும். நேரடியாக அவருடைய பெயருக்கு அவை அனுப்பப்படக்கூடாது.

(8) முடிவுத் திகதிக்குப் பின்னர் இக்கந்தோரில் பெற்றுக்கொள்ளப்படும் விண்ணப்பங்கள் சாதாரணமாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. விண்ணப்பம் தபாலிற் காணமற்போய்விட்டதோ அல்லது தாமதமாகி விட்டதோ என்ற குற்றச்சாட்டுக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. கடைசி நாட்கள் வரை தமது விண்ணப்பங்களை அனுப்பாமல் வைத்திருக்கும் பரீட்சார்த்திகள் தாமாகவே விளைவைத் தேடிக்கொள்கின்றனர்.

வேறுவிதம் கூறப்பட்டாலன்றி உபயோகிக்கப்பட வேண்டிய விண்ணப்ப மாதிரிப் பத்திரம்

உள்ளூராட்சிச் சேவை

முக்கியமாகக் கவனிக்க.—விண்ணப்பத்தைக் கீழே விதித்துள்ள முறையில் எழுதி பதவி பற்றிய வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலிற் சொல்லப்படும் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளுவதற்கான, கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் செயலாளர், உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபை, தபாற் பெட்டி 530, கொழும்பு என்ற விலாசத்தை அடையும் வண்ணம் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பத்தை செயலாளரின் பெயருக்கு விலாசமிட்டு அனுப்பலாகாது.

(2) விண்ணப்பகாரர் தமது விண்ணப்பங்களை, தயார் செய்யு முன்னர் மேற்கூறிய பொது நிபந்தனைகளையும் வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலின் வேண்டுதலையும் கவனமாக வாசித்து விண்ணப்பிப்பதற்குத் தாங்கள் சகல வகைகளிலும் அருகதையுடையவர்கள்தான் என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டுமென்று ஆலோசனை கூறப்படுகின்றது. விண்ணப்பகாரர் வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலை உசாவி, உரிய சகல தகவல்களையும் தவறாது கொடுக்கவேண்டும்.

(3) விண்ணப்பகாரர் கீழ்க்காணும் சாதனங்களின் பிரதிகளை அவர்களின் விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும்—(1) ஆங்கிலத்தில்/சிங்களத்தில்/தமிழில் சித்தியெய்திய ஆக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ், (2) குணச் சான்றிதழ், (3) பதவி அத்தகைய தன்மையதாயின் உயர் தொழில்/தொழில்நுட்பத் தகைமைகளின் சான்றிதழ்.

(4) விண்ணப்பகாரர் மேற்கூறிய பொது நிபந்தனைகளின் 8 ஆம் பந்தியை விசேடமாகக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறார்கள்.

...............(...............) பதவிக்கான விண்ணப்பம்

1. (அ) வெற்றுப் பதவி விளம்பரப்படுத்தப்பட்டுள்ள வர்த்தமானப் பத்திரிகையின் திகதி :———.

(ஆ) .............................பதவிக்கான விண்ணப்பம்.

2. முழுப் பெயர் (தனித்தனி எழுத்துக்களில்) :———.
தேசிய இனம் :———.

(மேலேயுள்ள 5 ஆம் நிபந்தனையில் கூறப்பட்டுள்ள வரைவிலக்கணத்தின்படி இலங்கையரா ? இலங்கையரல்லாதவரா ? என்பதைக் கூறுக. நீர் பதிவு மூலம் இலங்கைப் பிரசையாயிருப்பின் பிரசாவுரிமைச் சான்றிதழின் சார்பு எண்ணையும் திகதியையும் கூறுக.)

3. தபால் விலாசம் :———.

(விலாசமாற்றமெதுவும் உடனே அறிவிக்கப்பட வேண்டும்.)

4. (அ) விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளுவதற்கான கடைசித் திகதியில் சரியான வயது :—

———வருடங்கள். ———மாதங்கள். ———நாட்கள்.

(ஆ) பிறந்த திகதி :
———வருடம். ———மாதம். ———திகதி.

5. பிறந்த இடம் :

(அ) விண்ணப்பகாரர் :———.

(ஆ) அவரது பிதா :———.

(இ) அவரது பிதாவழிப் பேரன் :———.

(ஈ) அவரது பிதாவழிப் பாட்டன் :———.

(விண்ணப்பதாரர் இலங்கையில் பிறந்தவராயின் (அ) வுடன் ஒன்றில் (ஆ) வை அல்லது (இ) வையும் (ஈ) வையும் நிரப்புதல் வேண்டும். விண்ணப்பகாரர் இலங்கையில் பிறவாதவராயின் (அ) வோடு ஒன்றில் (ஆ) வையும், (இ) வையும் அல்லது (இ) வையும் (ஈ) வையும் நிரப்புதல் வேண்டும்).

6. விவாகமானவரா ? தனியாளரா ? அல்லது தாரமிழந்தவரா ? கைம்பெண்ணா ? ———.

7. 12 வயது தொடக்கம் படித்த பாடசாலைகளும், கல்லூரிகளும் மற்றும் தாபனங்களும் :—

| பொதுக் கல்வி | | | உயர்தொழில்/தொழில் நுட்பக் கல்வி | | |
|---|---|---|---|---|---|
| பாடசாலை அல்லது கல்லூரி | சேர்ந்த திகதி | விட்ட திகதி | தாபனம் | சேர்ந்த திகதி | விட்ட திகதி |
| 1. ................ | | ...... | 1 ................ | | |
| 2. ................ | | ...... | 2 ................ | | |
| 3. ................ | | ...... | 3 ................ | | |
| 4. ................ | | ...... | 4 ................ | | |
| 5. ................ | | ...... | 5 ................ | | |

8. கல்வித் தகைமைகள் :—

(அ) சி. பா. த. பத்திரம்/க. பொ. த. ப. (சாதாரண தரம்)

| | பரீட்சையில் சித்தியடைந்த வருடம் | சுட்டிலக்கம் | பாடங்கள் | திறமைச் சித்தி | விசேட சித்தி |
|---|---|---|---|---|---|
| முதல்தடவை | | | | | |
| இரண்டாம் தடவை | | | | | |

(ஆ) க. பொ. த. ப. (உயர்தரம்)

| | பரீட்சையில் சித்தியடைந்த வருடம் | சுட்டிலக்கம் | பாடங்கள் | திறமைச் சித்தி | விசேட சித்தி |
|---|---|---|---|---|---|
| | | | | | |

(இ) வேறு கல்வித் தகைமைகள் :—

| பரீட்சையின் பெயர் | பரீட்சையில் சித்தியடைந்த வருடம் | சுட்டிலக்கம் | பாடங்கள் |
|---|---|---|---|
| | | | |

(ஈ) கீழ் உள்ளவற்றில் சித்தியடைந்த ஆகக்கூடிய பரீட்சை :—

1. சிங்களம் :————.
2. தமிழ் :————.
3. ஆங்கிலம் :————.

9. பெற்றுள்ள ஏதும் உயர் தொழில் அல்லது தொழில் நுட்ப அல்லது இருவகைத் தகைமைகளையும் திகதிகளுடனும் தபானங்களின் பெயர்களுடனும் தருக :————.

10. உயர்தெழில்/தொழில்நுட்ப/அனுபவங்கள் :—

| தாபனத்தின் பெயர் | தொழிற் பயிற்சி வகுக்கப்பட்ட பதவியின் தன்மை | சேர்ந்த திகதி | விட்ட திகதி |
|---|---|---|---|
| | | | |

(சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்பட வேண்டும்)

11. (அ) பாடசாலையை விட்டபின்னர் வகித்த உத்தியோகம் (வகித்த பதவிகளை அவற்றில் சேர்ந்த, அவற்றை விட்ட திகதிகளுடன் தருக) :—

(ஆ) நிரந்தரமாகவேனும் தற்காலிகமாகவேனும் அரசாங்கத்திலாவது உள்ளூராட்சித் தாபனத்திலாவது உத்தியோகத்திலிருந்து அந்த உத்தியோகம் எச்சமயத்திலேனும் நிறுத்தப்பட்டிருப்பின், சேவை நிறுத்தப்பட்டமைக்கான காரணத்தை திகதிகளுடன் விபரமாக விளக்குக :————.

(இ) உள்ளூராட்சிச் சபைகளில் பார்த்த உத்தியோக விபரம் (பதவி, உள்ளூராட்சித் தாபனம், காலம்) : ————.

(ஈ) தற்போதைய உத்தியோகம் பற்றிய பின்வரும் விபரங்களைக் கூறுக :—

(1) உத்தியோகப் பதவிப் பெயரும் அதன் தரமும் அதில் நியமிக்கப்பட்ட திகதியும் :————.

(2) தற்போதைய சம்பளமும் (படிகள் நீங்கலாக) சம்பள அளவுத் திட்டமும் :————.

(3) இளைப்பாற்றுச் சம்பளமுண்டா ? :————.

(உ) முன்னைநாட் போர்வீரராயின் இருந்த படைப் பிரிவு, வரிசைப் பதவி ஆகியவற்றின் விபரங்களும் சேர்ந்த, விடுபட்ட திகதிகளும் :————.

12. இம்மொழிகளில் வாசிக்கும், எழுதும், பேசும் தேர்ச்சியுண்டா ? :—

(அ) சிங்களம் :————.

(ஆ) தமிழ் :————.

13. விசேட தகைமைகள்.—விளம்பரத்தில் குறிப்பிடப்பட்ட விசேட தகைமைகள் அல்லது அனுபவம் இவை இரண்டும் உமக்குண்டா ? உண்டெனில், அவற்றின் முழு விபரங்களையும் திகதிகளுடன் தருக :————.

14. ஒரு நீதிமன்றத்தில் ஏதும் கிறிமினல் குற்றத்தின் பொருட்டு தண்டிக்கப்பட்டதுண்டா ? உண்டெனில், அவ்வழக்கின் திகதியையும் இலக்கத்தையும் குற்றத் தீர்ப்பின் தன்மையையும் தருக :————.

15. கடன் தொல்லையில்லாதிருக்கின்றீரா ? இல்லையாயின் எவ்வளவுக்குக் கடனாளியாக இருக்கின்றீர் ? :————.

16. வேறு ஏதும் விபரங்கள் (விசேட உரிமைக் கோரிக்கைகள் ஆதியன) :————.

17. யார் யாரிடமிருந்து குணச் சான்றிதழ்கள் பெறப்பட்டிருக்கின்றனவோ அவர்களின் பெயர்களும் உத்தியோகப் பதவிப் பெயர்களும் (அச்சான்றிதழ்களின் மூலப்பிரதிகளை இணைக்காது நகல் பிரதிகளையே இணைத்தல் வேண்டும். அட்டவணைப்படுத்தப்பட்ட பதவிகளை வகிக்கும் உள்ளூராட்சிச் சேவை அங்கத்தவர்கள் இந்த வேண்டுதலை நிறைவேற்றவேண்டியதில்லை) :————.

விண்ணப்பத்தில் நான் தந்துள்ள விபரங்கள் உண்மையானவையென்றும் செம்மையானவையென்றும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இதிலடங்கியுள்ள விபரங்களெதுவும் பொய்யானவை அல்லது செம்மையில்லாதவை எனக் காணின், தெரிவுக்கு முன்னர் தகைமை நீக்கத்துக்கும், நியமனத்துக்குப் பின்னர் அச் செம்மையின்மை கண்டுபிடிக்கப்படின், எனக்கு நட்டஈடு எதுவுமின்றி வேலை நீக்கத்துக்கும் நான் பாத்திரமாவேன் என்பதையும் நான் அறிவேன்.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி :————.

செயலாளர் அவர்கட்கு,
உள்ளூராட்சிச் சேவை அதிகார சபை,
தபால் பெட்டி 530, கொழும்பு 1.

உள்ளூராட்சிச் சேவை

ஆயுர்வேத வைதியர் பதவிகள்

ஆயுர்வேத வைத்தியர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் உள்ளூர் ஆட்சிச் சேவைத் திணைக்களத்தால் கோரப்படுகின்றன.

2. வேதனம்.—இப்பதவிக்குரிய திர்ட்டிய வேதனம் வருமாறு.—வருடாந்தம் ரூ. 5,736–6 × 144–8 × (180–6 × 240—ரூ9,480. வருடாந்தம் ரூ. 6,780, 7,500, 8,280 பெறுமுன் வினைத்திறமைகாண் தடையுண்டு.

3. வேண்டிய தகைமைகள்.—(அ) 1949 ம் ஆண்டின் 49 ம் இலக்க உண்ணாட்டு மருந்து திருத்தச் சட்டத்தின் 2 வது பிரிவின் கீழ், விண்ணப்பதாரர்கள் தங்கள் பெயர்களைப் பதிவு செய்திருத்தல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரர்கள் அங்கீகரிக்கப்பட்ட ஒரு ஆயுள்வேத கல்லூரியின் உண்ணாட்டு மருத்துவ சத்திரசிகிச்சை டிப்ளோமாப் பட்டம் அல்லது ஒரு அங்கீகரிக்கப்பட்ட ஆயுள்வேதக் கல்லூரியில் இதற்குச் சமமான அல்லது உயர்ந்த தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

ஒரு தொழில் நடாத்தும் பொது ஆயுள்வேத வைத்தியராக 3 வருடத்திற்குக் குறையாமல் அனுபவம் பெற்றிருக்கவேண்டும். அல்லது,

(இ) அவர்கள் பொது ஆயுள்வேத வைத்தியராக பதிவு செய்யப்பட்டிருப்பதுடன் 5 வருடங்களுக்குக் குறையாத அனுபவமும் பெற்றிருத்தல் வேண்டும். இத்தகைய விண்ணப்பதாரர்கள், பொது ஆயுள்வேத வைத்தியராக தொழில் நடாத்திக் குறிப்பிட்ட வருடங்களுக்கு அத்தாட்சியாக, பிரதேசத்திலுள்ள தகுதியான மூவரிடமிருந்து பெற்ற சான்றிதழ்களின் பிரதிகளையும் அனுப்பவேண்டும்.

(ஈ) 1975.05.30 ல் 25 வயதிற்கும் 35 வயதிற்கும் இடைப்பட்டவர்களாக அவர்கள் இருத்தல் வேண்டும்.

4. தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்திகள் தனித்துச் சொந்தத்தில் வைத்தியஞ் செய்யத் தவிர்க்கப்பட்டவர்களாவார். நியமிக்கப்பட்ட ஆயுள்வேத வைத்தியசாலையின் அருகே அவர்கள் வசிக்கும்படி இருக்கும்.

5. பின்வரும் சான்றிதழ்களின் பிரதிகளை (மூலம் அல்ல) விண்ணப்பதாரர்கள் இணைக்க வேண்டும்.

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (ஞானஸ்நானச் சான்றிதழோ, சத்தியவோலைகளோ அரசாங்க நன்கொடைப் பள்ளிக்கூடங்களுக்குரிய பிரமாணச் சட்டக்கோவை சம்பந்தமாக விநியோகிக்கப்பட்ட சான்றிதழோ ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது)

(ஆ) ஆயுள்வேத வைத்தியராகத் தொழில் நடாத்தியவர் என்பதற்கு அத்தாட்சியாக, காலவரையறை குறிப்பிடப்பட்ட பகுதியின் 3 பிரமுகர்களிடமிருந்து பெற்ற சான்றிதழ்கள்.

6. இந்த அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையின் ஆரம்பத்தில் வெளியிடப்பட்டிருக்கும் IV வது பகுதியில் உள்ள உள்ளூர் ஆட்சிச் சேவைப் பகுதிகளுக்குரிய நியமனங்கள் சம்பந்தமான பொது நிபந்தனைகளைப் பார்க்கவும்.

7. நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளுடன் இணைக்கப்பட்டிருக்கும் மாதிரி விண்ணப்பப் பத்திரத்தில் கண்டவாறு விண்ணப்பங்கள் நிரப்பப்பட்டு 1975.05.30 ம் திகதிக்குப் பிந்தாமல் உள்ளூராட்சிச் சேவைத் திணைக்களத்திற்குக் கிடைக்குமாறு அனுப்பப்பட வேண்டும். குறிப்பிட்ட அம்மாதிரிப் பத்திரத்தில் உள்ள 13 வது பந்திக்கும் பதிலாக பின்வருவதைச் சேர்த்துக் கொள்ளவும் :—

“13 (1) தகைமைகள் பெற்ற பின் பொது ஆயுர்வேத வைத்திய ராகத் தொழில் நடாத்தத் தொடங்கிய காலம் (சான்றிதழ்களின் அத்தாட்சியுடன்) ;

(2) ஆயுர்வேதத்தில் உள்ள எந்தத்துறையிலாகுதல் விசேட பயிற்சி பெற்றுண்டா அப்படியாயின் விபரங்களைத் தருக ;

(3) ஆயுர்வேதத்தில் தகைமைகள் (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்பட வேண்டும்)

(4) எந்த ஆயுர்வேத கல்லூரியிலிருந்து மேற்படி தகைமைகளைப் பெற்றது ;

(5) இத்தகைமைகளைப் பெற்ற திகதி ;

(6) 1949 ம் ஆண்டின் 49 ம் இலக்க உண்ணாட்டு மருத்துவ திருத்தச் சட்டத்தின் 2 வது பிரிவின் கீழே உள்ள “ பொது இடாப்பு ” அல்லது “ விசேட இடாப்பில் ” பதிவு செய்யப்பட்ட இலக்கம். ”

8. உள்ளூராட்சிச் சேவை திணைக்களப் பணிப்பாளருக்கு விண்ணப்பங்களையோ அல்லது மற்றைய கடிதத் தொடர்புகளையே விலாசமிட வேண்டுமேயன்றி, இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்குமோ நேர்முகமாய் அனுப்பக்கூடாது.

9. விண்ணப்பம் தபாலில் காணமற் போய்விட்டது, தாமதமாகி விட்டது என்ற எந்த விதமான சாட்டுகளும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. கடைசி நாட்கள்வரை விண்ணப்பங்கள் அனுப்பாமல் தாமதித்து வைத்திருப்பவர்கள் தமது சொந்தச் செயலினாலேயே தாமதிப்பவர்களாவர்.

10. அரசாங்க சேவையிலோ அல்லது உள்ளூராட்சிச் சேவையிலோ வேலைபார்க்கும் உத்தியோகத்தரிடமிருந்து வரும் விண்ணப்பப் பத்திரங்கள் குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் இக்கந்தோருக்கு வந்தால் அவ்வுத்தியோகத்தர்கள் குறிப்பிட்ட திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ தமது விண்ணப்பங்களைப் பகுதித் தலைவர் அல்லது மாநகர சபை ஆணையாளர், உள்ளூராட்சி மன்றத் தலைவர் ஆகியோரிடம் சமர்ப்பித்திருந்து அவர்கள் தாமதத்திற்குரிய உறுதியான காரணங்களைக் காட்டி, விண்ணப்பப் பத்திரங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சிபார்சு செய்தாலன்றி, அவ்வுத்தியோத்தர்களின் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

11. தகுதியுடைய விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படும்.

ஆர். அபேரத்ன,
பணிப்பாளர்,
உ. ஆ. சே. திணைக்களம்.

உள்ளூராட்சிச் சேவைத் திணைக்களம்,
19, லோங்டன் இடம்,
த. பெ. 530,
கொழும்பு 7.

4–348—18.04.75 ந் திகதிய வர்த்தமானி 160

---

# துணை விதிகள்

பத்தறமுல்லப் பட்டினசபை

பட்டினசபைகள் கட்டளைச்சட்டம் (256 ம் அத்தியாயம்).

(256 ஆம் அத்தியாயமான) பட்டினசபைகள் கட்டளைச்சட்டத்தின் 152, 156 ஆகிய பிரிவுகளின்கீழ் பத்தறமுல்ல—தலங்கமைப்பட்டினசபையால் ஆக்கப்பட்டு, அக்கட்டளைச்சட்டத்தின் 152 ம் பிரிவின்கீழ் அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகள்.

டீ. இராசேந்திரா,
மேலதிகச் செயலாளர்,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1975 ம் ஆண்டு ஏப்பிரல் மீ 2 ந் வ.

கட்டடங்களின் மாதிப்பபடங்களைப் பரிசோதித்துக் கருத்திற் கொள்வது சம்பந்தமான துணைவிதிகள்

1. (268 ஆம் அத்தியாயமான) வீடமைப்பு, நகர சீர்திருத்தக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அங்கீகாரத்துக்கெனச் சமர்ப்பிக்கப்படும் புதிய கட்டடங்களுக்கான அல்லது ஏற்கனவே இருக்கும் கட்டடங்களுக்கு மாற்றங்கள் செய்வதற்கான விண்ணப்பங்களையும், மாதிரிப்படங்களையும், வரைவுப்படங்களையும், விவரக்கூற்றுக்களையும் பரிசோதிப்பதற்காகவும், கருத்திற்கொள்வதற்காகவும், இதனுடனுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள விகிதங்களின்படி நிர்மாணிக்கப்படும் ஒரு கட்டணத்தைக் கட்டுதல் வேண்டும்.

2. (1) 1 ஆம் துணைவிதியின்கீழ்ச் செலுத்தப்படற்பாலதான கட்டணத் தொகை பத்தறமுல்ல—தலங்கமைப் பட்டினசபைத் தலைவரிடமிருந்து கோரிக்கையொன்று கிடைக்கப்பெற்ற திகதியிலிருந்து ஏழு நாட்களுக்குள், அங்கீகாரத்திற்காக அல்லது சம்மதத்திற்காகு விண்ணப்பம் செய்யும் நபரினால் செலுத்தப்படுதல் வேண்டும்.

(2) இத்துணைவிதியின் முந்திய பந்தியில் விதிக்கப்பட்ட காலத்துக்குள் அத்தகைய கட்டணத்தைச் செலுத்தத் தவறும் ஒவ்வொரு நபரும், ஒரு தவற்றை செய்தவராகி, குற்றத்தீர்ப்பு அளிக்கப்படுகையில் நூறு ரூபாவுக்கு மேற்படாத ஒரு தண்டத்தைச் செலுத்தவும் பாத்திரராவார்.

(3) துணைவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணஞ் செலுத்தப்படும் வரை, விண்ணப்பம் மாதிரிப்படம், வரைவுப்படம், அல்லது விவரக்கூற்று எதையும் பரிசோதித்துக் கருத்திற்கொள்ளுதலாகாது.

அட்டவணை

1. புதிய கட்டடங்களுக்கான அல்லது ஏற்கனவேயுள்ள கட்டடங்களின் தளப்பரப்பை விஸ்தரிப்பதனை உட்படுத்தும் மாற்றங்களுக்கான மாதிரிப்படங்களுக்கு—

| | ரூ. ச. |
|---|---|
| (அ) மொத்தத் தளப்பரப்பு 500 சதுர அடிக்கு மேற்படாத விடத்து .. .. .. | 5 00 |
| (ஆ) மொத்தத் தளப்பரப்பு 500 சதுர அடிக்கு மேற்பட்டு ஆனால் 1000 சதுர அடிக்கு மேற்படாதவிடத்து | 10 00 |
| (இ) மொத்தத் தளப்பரப்பு 1000 சதுர அடிக்கு மேற்பட்டு ஆனால் 2000 சதுர அடிக்கு மேற்படாதவிடத்து .. | 15 00 |
| (ஈ) 2000 சதுர அடிக்கு மேற்படும் ஒவ்வொரு மேலதிகமான 100 சதுர அடிகொண்ட கூறுக்கும் அல்லது அதன் பாகத்துக்கும் .. .. .. | 5 00 |
| 2. தளப்பரப்பை விஸ்தரிப்பதனை உட்படுத்தாது ஏற்கனவே இருக்கும் கட்டடங்களின் மாற்றங்களுக்கான மாதிரிபடங்களுக்கு | 5 00 |
| 3. கட்டட அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடிகாலத்தை நீடிப்பதற்கான விண்ணப்பமொன்றின் விடயத்தில் .. | 2 00 |

இவ்வட்டவணையில் "நிலப்பரப்பு" என்பது கீழ்த்தளத்தில் அல்லது வேறெந்த மாடியிலுமுள்ள இடம் எனப் பொருள்படும்.

4–317—18.04.75 ந் திகதிய வர்த்தமானி இல. 160

---

## தல்தெனியக் கிராம சபை

### கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

(257 ஆம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 42 ஆம் பிரிவின் கீழ் பதுளை மாவட்டத்திலுள்ள தல்தெனியக் கிராமப் பிரதேசத்துக் கிராமசபையால் ஆக்கப்பட்டு அப்பிரிவின் (3) என்னும் உட்பிரிவினால் தமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி.

டீ. இராசேந்திரா,
மேலதிகச் செயலாளர்,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு, 03 ஏப்பிரல் 1975.

### துணைவிதி

நீர் வழங்கல் சேவை சம்பந்தமாக தன்தெனக் கிராமப் பிரதேசத்துக் கிராமச்சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமத்துணைவிதிகளின் XXVIII ஆம் பாகத்திலுள்ள துணைவிதிகள், அவை இச்சபைக்கு ஏற்புடையனவாக இருக்கும்வரை 27 (2) என்னும் துணைவிதியை உடனடத்துப் பின்வரும் புதிய பந்தியை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றன :—

"(3) சபையினால் நிறுவப்பட்டுள்ள நீர் வழங்கல் சேவையிலிருந்து தனிப்பட்ட சேவைக் குழாயொன்று எம்மனைத்தலத்துக்கும் இணைக்கப்பட்டிருக்குமிடத்து அத்தகைய மனைத்தலத்தின் உடைமையாளர் அல்லது குடியிருப்பாளர், அறிவித்தலொன்று முறையாக கொடுக்கப்படும்போது சொல்லப்பட்ட நீர் வழங்கல் சேவையிலிருந்து அவ்வாறு பெறப்படும் நீருக்குப் பின்வரும் விகிதங்களில் கணக்கிடப்படும் கட்டணங்களை ஒவ்வோராண்டும் செலுத்தல் வேண்டும்.

### கட்டண விகிதங்கள்

| | முதலாவது ½ அங்குல குழாய் வாயிலுக்கு ரூ. ச. | மேலதிக ½ அங்குல குழாய்வாயில ஒவ்வொன்றுக்கும் ரூ. ச. |
|---|---|---|
| வீட்டுக்கருமங்கள் தவிர்ந்த வேறு கருமங்களுக்கு நீர் வழங்குதற்காக குழாய் இணைக்கப்பட்டிருக்குமிடத்து | 50 0 | 25 0 |
| வீட்டுக்குழாய்களுக்கு நீர் வழங்குதற்காகக் குழாய் இணைக்கப்பட்டிருக்குமிடத்து .. .. | 25 0 | 10 0 |

4–360—18.04.75 ந் திகதிய வர்த்தமானி இல. 160

---

## பொலநறுவைப்பட்டின சபை

### பட்டினசபைகள் கட்டளைச் சட்டம்

(256 ம் அத்தியாயமான) பட்டினசபைகள் கட்டளைச் சட்டத்தின் 152, 166 ஆகிய பிரிவுகளின் கீழ் பொலநறுவைப்படினசபையால் ஆக்கப்பட்டு அக்கட்டளைச்சட்டத்தின் 153 ம் 'பிரிவினால்' தமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகள்.

டி. இராசேந்திரா,
மேலதிக செயலாளர்,
அரசாங்க நிருவாக, உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு, 1975.04.03

### துணை விதிகள்

1. (268 ம் அத்தியாயமான) வீடமைப்பு, நகரச்சீர்திருத்தக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அங்கீகாரத்துக்கெனச் சமர்ப்பிக்கப்படும் புதிய கட்டடங்களுக்கான அல்லது ஏற்கனவே இருக்கும் கட்டடங்களுக்கு மாற்றங்கள் செய்வதற்கான விண்ணப்பங்களையும், மாதிரிப்பட்டங்களையும் வரைவுப்படங்களையும் விவரக் கூற்றுக்களையும் பரிசோதிப்பதற்காகவும், கருத்திற்கொள்வதற்காகவும் இதனோடுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள விகிதங்களின்படி தீர்மானிக்கப்படும் ஒரு கட்டணத்தைக் கட்டுதல் வேண்டும்.

2. (1) 1 வது துணைவிதியன் கீழ்க் கட்டவேண்டிய கட்டணத் தொகையைப் பொலநறுவைப்பட்டின சபைத் தலைவர் அதனைக் கட்டும்படி கேட்டு எழு நாட்களுக்குள், அங்கீகாரங்கேட்டு அல்லது சம்மதம் கேட்டு விண்ணப்பிப்பவர் கட்டவேண்டும்.

(2) இத்துணைவிதியின் முந்திய பந்தியில் விதிக்கப்பட்ட காலத்துக்குள் அக்கட்டணத்தைக் கட்டத் தவறும் ஒவ்வொருவரும் ஒரு தவறைச் செய்தவராவதோடு குற்றத் தீர்ப்பு அளிக்கப்படுகையில் நூறு ரூபாவுக்கு மேற்படாத ஒரு குற்றப்பணம் செலுத்தவும் ஆளாதல் வேண்டும்.

(3) 1 ம் துணைவிதியில் குறிப்பிடப்பட்ட கட்டணம் கட்டப்படும் வரை விண்ணப்பம் மாதிரிப்படம், வரைவுப்படம் அல்லது விவரக்கூற்று எதையும் பரிசோதித்து கருத்திற்கொள்ளலாகாது.

1. புதிய கட்டங்களுக்கான அல்லது ஏற்கனவேயுள்ள கட்டடங்களின் தளப்பரப்பை விஸ்தரிப்பதனை உட்படுத்தும் மாற்றங்களுக்கான மாதிரிப்படங்களுக்கு—.

| | ரூ. ச. |
|---|---|
| (அ) மொத்தத் தளப்பரப்பு 500 சதுர அடிக்கு மேற்படாவிடத்து | 5 0 |
| (ஆ) மொத்த தளப்பரப்பு 500 சதுர அடிக்கு மேற்பட்டு, ஆனால் 100 சதுர அடிக்கு மேற்படாதவிடத்து | 15 0 |

| | ரூ. | ச. |
|---|---|---|
| (இ) மொத்தத் தளப்பரப்பு 1000 சதுர அடிக்கு மேற்பட்டு ஆனால் 3000 சதுர அடிக்கு மேற்படாதவிடத்து | 25 | 0 |
| (ஈ) ஒவ்வொரு மேலதிகமான 1000 சதுர அடிகொண்ட கூறுக்கும் அல்லது அக்கூறின் பகுதிக்கும் | 25 | 0 |
| 2. (அ) தளப்பரப்பை விஸ்தரிப்பதனை உட்படுத்தும் எற்கெனவே இருக்கும் கட்டடங்களின் மாற்றங்களுக்கான மாதிரிப்படங்களுக்கு தற்போதுள்ள தளப்பரப்பு 500 சதுர அடிக்கு மேற்படுமிடத்து | 10 | 0 |
| (ஆ) 500 சதுர அடியைக் கொண்ட ஒவ்வொரு மேலதிகக் கூற்றுக்கும் அல்லது அதன் பாகத்துக்கு | 10 | 0 |
| 3. புதிதாக மாதிரி ப்படம் எதையும் சமர்ப்பிக்காது அங்கோரத்தைப் புதுப்பிப்பதற்காய விண்ணப்பமொன்றுக்கு | 5 | 0 |

இவ்வட்டவணையில் " தளப்பரப்பு " என்பது நிலத் தளத்திலுள்ள அல்லது வேறெந்தத் தளத்திலுமுள்ள வெளி எனப் பொருள்படும்.

4—359—18.04.75 ந திகதிய வர்த்தமானி இல. 160

---

ச.வ.—பி. 177/36

யாழ்ப்பாண மாநகரசபை.

நாய்களைப் பதிவுசெய்தல் கட்டளைச்சட்டம்

(477 ஆம் அத்தியாயமான) நாய்களைப் பதிவுசெய்தல் கட்டளைச்சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ், யாழ்ப்பாண மாநகர சபையின் நிருவாக எல்லைக்குட்பட்ட பிரதேசத்துக்காக, அதன் சார்பிலான தகுந்த அதிகாரியினால் அஃதாவது யாழ்ப்பாண மாநகர சபையினால், ஆக்கப்பட்ட துணைவிதிகள்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
1975 ம் ஆண்டு ஏப்பிரல் மீ 03 ந உ.

முதல்வர்,
யாழ்ப்பாண மாநகரசபை.

துணைவிதிகள்

1. இந்தத் துணைவிதிகளில்—

" சபை " என்பது யாழ்ப்பாண மாநகரசபை எனப் பொருள்படும் ;

" முதல்வர் " என்பது யாழ்ப்பாண மாநகரசபை முதல்வர் எனப் பொருள்படும் ;

" பதிவுசெய்தற்கான ஆண்டுக் கட்டணம் " என்பது, நாய்களைப் பதிவுசெய்தல் கட்டளைச்சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் விதிக்கப்பட வேண்டிய பதிவுசெய்தற்கான ஆண்டுக்கட்டணம் எனப் பொருள்படும் ; அத்துடன்

" சொந்தக்காரர் " என்பது, நாய் தொடர்பில், அந்நாயைத் தமது கட்டுக்காப்பில் வைத்திருக்கும் அல்லது தமது உடைமையில் வைத்திருக்கும் ஆளை உள்ளடக்கும்.

2. (1) ஆறுமாத வயதுக்கு மேற்பட்ட நாய் எதுவும் வைத்திருக்கப்படும் ஏதேனும் வீட்டின் அல்லது வளவின் குடியிருப்பாளர், ஒவ்வோர் ஆண்டிலும் மார்ச்சு மாதம் முதலாம் நாளன்று அல்லது அதற்கு முன்னர், பொருளளவில் இதனோடுள்ள முதலாம் அட்டவணையில் தரப்பட்ட படிவத்தில் உள்ளபடியாக விவரத்திரட்டு ஒன்றைச் சபைக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(2) ஆறுமாத வயதுக்கு மேற்பட்ட நாய் எதையும், எந்த ஆண்டிலும் மாச்சு 1 ஆந் தேதிக்குப் பின்னர் ஆளெவரும் கொள்ளுமிடத்து அல்லது அதன் சொந்தக்காரர் ஆகுமிடத்து அல்லது வீடெதிலும் அல்லது வளவு எதிலும் வைத்திருக்கத் தொடங்குமிடத்து, பொருளளவில் இதனோடுள்ள முதலாம் அட்டவணையில் தரப்பட்ட படிவத்தில் உள்ளபடியாக மேலதிகமான ஒரு விவரத்திரட்டை அவர் சபைக்கு உடனடியாகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

3. எந்த நாயினதும் வயதைப் பற்றி எப்போதேனும் பிணக்கு எதுவும் எழுகின்ற விடயத்தில், சபையின் முடிவு இறுதியானதாதல் வேண்டும்.

4. காலத்துக்குக் காலம் சபையால் தீர்மானிக்கப்படக்கூடியவாறு, ஒவ்வொரு நாயின் சொந்தக்காரராலும்—

(அ) 2(1) ஆம் துணைவிதியின்கீழ் விவரத்திரட்டு அது தொடர்பாகச் சமர்ப்பிக்கப்படும் ஒரு நாயின் விடயத்தில், கட்டணம் செலுத்துவதற்குரிய ஆண்டின் ஏப்பிறில் 1 ஆந் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் ; அல்லது

(ஆ) 2(2) ஆம் துணைவிதியின் கீழ் மேலதிகமான விவரத்திரட்டு அது தொடர்பாகச் சமர்ப்பிக்கப்படும் ஒரு நாயின் விடயத்தில், அத்தகைய மேலதிகமான விவரத்திரட்டு சமர்ப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து பதினைந்து நாட்களுக்குள்,

பதிவு செய்தலுக்கான ஆண்டுக்கட்டணம் செலுத்தப்படல் வேண்டும்.

5. விவரத்திரட்டொன்று அது தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நாய் எதையும் முன்னிலைப்படுத்துமாறு சபை தேவைப்படுத்தலாம் என்பதுடன், பார்வையிடுவதற்காக அந்த நாயை முன்னிலைப்படுத்தும்வரை அந்த நாய்க்கான பதிவுச் சான்றிதழை வழங்குவதற்குச் சபை மறுக்கலாம்.

6. (1) பதிவு செய்தலுக்கான ஆண்டுக்கட்டணம் செலுத்தப்பட்டதன்மேல் சபையானது, நாயின் சொந்தக்காரருக்கு—

(அ) பதிவுச் சான்றிதழொன்றையும், அத்துடன்

(ஆ) சான்றிதழின் இலக்கம் பொறிக்கப்பட்ட உலோகச் சீட்டு அல்லது பட்டி ஒன்றையும்,

வழங்குதல் வேண்டும்.

(2) பதிவுச் சான்றிதழானது, பொருளளவில் இதனோடுள்ள அட்டவணையில் தரப்பட்ட படிவத்தில் உள்ளபடியாதவிருத்தல் வேண்டும் என்பதுடன், அதன் மறுபக்கத்தில், 8 ஆம் துணைவிதியால் விதிக்கப்பட்ட நிபந்தனைகளைக் கொண்டதாகவிருத்தலும் வேண்டும்.

7. (1) ஒவ்வொரு நாயின் சொந்தக்காரரும், அந்த நாய் பொது வீதிகளிலும், பொதுப் பூங்காக்களிலும், ஏனைய பொது இடங்களிலும் அலைந்து திரியாதிருப்பதனை உறுதிப்படுத்தல் வேண்டும்.

(2) பொது வீதிகளிலும், பொதுப் பூங்காக்களிலும், ஏனைய பொது இடங்களிலும் பதிவுசெய்யப்பட்ட நாய் அலைந்து திரிவது காணப்பட்டால் அது பிடிக்கப்பட்டு மறித்துவைக்கப்படுதல் வேண்டும் ; ஆனால் அவ்வாறு பிடிப்பதிலும் மறித்துவைப்பதிலும் உறப்பட்ட நியாயமான செலவுகளை கொடுத்ததன்மேல் அந்த நாய் விடுதலைசெய்யப்படும்.

8. பதிவுச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ள நாய் எதுவும்—

(அ) சபையின் சுகாதார மருத்துவ அலுவலரின் கருத்துப்படி உயிர்வாழத் தகுதியற்றவாறு மாற்றமுடியாத ஊனமுடையதாக அல்லது நோவுடையதாக வந்தால் ; அல்லது

(ஆ) சபையின் சுகாதார மருத்துவ அலுவலரின் கருத்துப்படி, அதன் சொந்தக்காரரால் வழக்கமாகத் துன்புறுத்தப்பட்டால் அல்லது அசட்டை செய்யப்பட்டால் ; அல்லது

(இ) ஏதேனும் தொற்றுநோயால் அல்லது தொடுநோயால் பீடிக்கப்பட்டிருக்கும்போது, வேறெந்த நாயுடனும் சேருவதற்கு, அதன் சொந்தக்காரர் அதை அனுமதித்தால் ; அல்லது

(ஈ) உலோகச் சீட்டு அல்லது பட்டி இன்றி அலைந்துதிரியக் காணப்பட்டால்,

அந்த நாயின் சொந்தக்காரரது முகவரியில் ஓர் அறிவித்தலை விட்டுவைத்த பின்னர், சபை அத்தகைய சான்றிதழை இல்லாதொழிக்கலாம்.

9. (1) ஐந்தாம் துணைவிதியின்கீழ் பதிவுச் சான்றிதழொன்று மறுக்கப்பட்ட அல்லது 8 ஆம் துணைவிதியின்கீழ் பதிவுச் சான்றிதழ் இல்லாதொழிக்கப்பட்ட ஏதேனும் நாயின் சொந்தக்காரர், சபையினால் அவ்வாறு செய்யுமாறு அறிவிக்கப்பட்டதன்மேல், அந்த அறிவித்தலில் குறிக்கப்படக்கூடிய அத்தகைய இடத்திலும் அத்தகைய நேரத்திலும் நாயை முன்னிலைப்படுத்தி, அதன் சார்பாகச் சபையால் முறைப்படி அதிகார மளிக்கப்பட்ட ஆளிடம் அதனை ஒப்படைத்தல் வேண்டும்.

(2) அத்தகைய நாய் ஒவ்வொன்றும், சபை பொருத்தமானதெனக் கருதும்வாறு ஒழிக்கப்படலாம் அல்லது வேறுவகையாக அகற்றப்படலாம்.

10. ஓர் உலோகச் சீட்டு அல்லது பட்டி வழங்கப்பட்டுள்ள ஏதேனும் நாயின் சொந்தக்காரர், அந்த நாய் தொடர்பில் வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழ் வலுவிலுள்ள காலத்தின்போது அந்த நாயின் கழுத்தைச் சுற்றி அந்த உலோகச் சீட்டு அல்லது பட்டி உறுதியாகப் பொருத்தப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான எல்லா நடவடிக்கைகளையும் எடுத்தல் வேண்டும்.

11. இந்தத் துணைவிதிகளால் சபைக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களெவற்றையும் அல்லது அவையெல்லாவற்றையும் பிரயோகிப்பதற்கு ஆளெவருக்கும் சபை எழுத்துமூலமாக அதிகாரமளிக்கலாம்.

12. நாய்களைப் பதிவுசெய்தல் தொடர்பில், யாழ்ப்பாண மாநகரசபையால் ஆக்கப்பட்டு, 1940 ஆம் ஆண்டு ஏப்பிரில் 26 ஆந் தேதிய 8,606 ஆம் இலக்கக் கசெற்றில் வெளியிடப்பட்ட துணைவிதிகள் இத்தால் நீக்கப்படுகின்றன.

முதலாம் அட்டவணை

யாழ்ப்பாண மாநகரசபை

படிவம்

வீட்டு இலக்கம் :————.

தெரு :————.

வட்டார இலக்கம் :————

வீட்டுக்காரர் பெயர் :————

| வளர்க்கப்படும் நாய்களின் எண்ணிக்கை | விவரணம் | | | | சொந்தக்காரரின் பெயர் | கொடுப்பனவுத் தேதி |
|---|---|---|---|---|---|---|
| | இனம் | ஆண் பெண் | நிறம் | குறிப்புகள் | | |
| | | | | | | |

சேர்ப்பிக்கப்படும் திகதி :————.

....................................  ....................................

சேர்ப்பிக்கும் ஆளின் கையொப்பம்.  வீட்டுக்காரரின் கையொப்பம்.

மேலேயுள்ள படிவத்தை நிரப்பி ஒரு வாரத்துக்குள் திருப்பியனுப்புமாறு, மேற்குறிப்பிட்ட வீட்டுக்காரர் இத்தால் தேவைப்படுத்தப் படுகின்றார் அவ்வாறு அவர் செய்யத் தவறினால், ரூபா 20 க்கு மேற்படாத குற்றப்பணம் இடப்பட்டுத் தண்டிக்கப்படுவோர்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

முதல்வர்,
யாழ்ப்பாண மாநகர சபை.

இரண்டாம் அட்டவணை

யாழப்பாண மாநகரசபை

படிவம்

வட்டார இலக்கம் :————.  பதிவு செய்யப்பட்ட இலக்கம் :————

அடியில் தரப்பட்ட விவரணத்தையுடையதும்/விவரணத்தையுடையனவும், அதற்காக/அவைக்காக ரூபா........................பதிவுக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளதுமான, ஒரு நாயை/நாய்களை, இன்றை நாள்,..............................தெருவில் ..................ஆம் இலக்க வீட்டில் வதியும்............................................................என்பவர், இந்த அலுவலகத்தில் பதிவு செய் துள்ளாரென இத்தால் சான்றளிக்கப்படுகின்றது.

நாயின்/நாய்களின் விவரணம்

இனம் :————  ஆண், பெண் :————  நிறம் :————.

197....மார்ச்சு 31 ஆந் தேதி இந்தச் சான்றிதழ் முடிவடைகின்றது.

முதல்வர்,
யாழ்ப்பாண மாநகர சபை.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்,......................19.....

8 ஆம் துணைவிதியில் இடப்பட்ட நிபந்தனைகள்

8. பதிவுச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ள நாய் எதுவும்—

(அ) சபையின் சுகாதார மருத்துவ அலுவலரின் கருத்துப்படி உயிர்வாழத் தகுதியற்றவாறு மாற்றமுடியாத ஊனமுடையதாக அல்லது நோய்வுடையதாக வந்தால் ; அல்லது

(ஆ) சபையின் சுகாதார மருத்துவ அலுவலரின் கருத்துப்படி, அதன் சொந்தக்காரரால் வழக்கமாகத் துன்புறுத்தப்பட்டால் அல்லது அசட்டை செய்யப்பட்டால் ; அல்லது

(இ) ஏதேனும் தொற்றுநோயால் அல்லது தொடுநோயால் பீடிக்கப்பட்டிருக்கும்போது, வேறெந்த நாயுடனும் சேருவதற்கு, அதன் சொந்தக்காரர் அதை அனுமதித்தால் ; அல்லது

(ஈ) உலோகச் சீட்டு அல்லது பட்டி இன்றி அலைந்து திரியக் காணப்பட்டால்,

அந்த நாயின் சொந்தக்காரரது முகவரியில் ஓர் அறிவித்தலை விட்டுவைத்த பின்னர், சபை அத்தகைய சான்றிதழை இல்லாதொழிக்கலாம்.

4–351—18.04.75 ந் திகதிய வர்த்தமானி இல. 160

### கெக்கிராவைப் பட்டினசபை

*பட்டின சபைகள் கட்டளைச் சட்டம்*

(256 ஆம் அத்தியாயமான) பட்டின சபைகள் கட்டளைச் சட்டத்தின் 152,156 ஆகிய பிரிவுகளின்கீழ் கெக்கிராவைப் பட்டின சபையால் ஆக்கப்பட்டு அக்கட்டளைச் சட்டத்தின் 153 ஆம் பிரிவின் கீழ் அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகள்.

டீ. இராசேந்திரா,
மேலதிகச் செயலாளர்,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு, 1975 ந் ஆண்டு ஏப்ரில் மீ 8 ந் உ.

### துணைவிதிகள்

1. (1) இத்துணைவிதிகள் 1975 ஆம் ஆண்டின் கெக்கிராவை முறைச் சந்தை துணைவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

(2) " கெக்கிராவை முறைச்சந்தை " என வழங்கப்படவேண்டியதும் அறியப்படவேண்டியதுமான முறைச்சந்தை ஒன்று ஒவ்வொரு திங்கட் கிழமையிலும் அல்லது சபையால் நிச்சயிக்கப்படும் வேறேதுமொரு நாளில் சபையால் நடாத்தப்படுதல் வேண்டும்.

2. (1) நிர்வாக அலுவலரின் அதிகாரத்தால் அல்லது அதிகாரத்தின் கீழ் வழங்கப்பட்ட அனுமதிச்சீட்டொன்றை உடையவராக அல்லது அத்தகைய உடையவரின் வேலையாளராக அல்லது முகவராக இருந்தாலன்றி அல்லது அத்தகைய அனுமதிச்சீட்டின் நிபந்தனைகளுக்கிணங்கவன்றி எவரும் முறைச்சந்தையின் வளவில் உள்ள ஏதேனும் விற்பிடத்தை அல்லது வெற்றிடத்தை பயன்படுத்தவோ அதில் நிலைகொள்ளவோ ஆகாது.

(2) முதலாம் பந்தியின் கீழ் வழங்கப்பட்ட ஒவ்வொரு அனுமதிச் சீட்டும் பொருளளவில் இதற்கான முதலாம் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ள படிவத்தில் இருக்கவேண்டும் என்பதோடு அது வழங்கப்படும் நாளுக்கு மட்டும் வலுவுள்ளதாக இருக்கவும் வேண்டும்.

3. இரண்டாம் துணைவிதியின்கீழ் வழங்கப்பட்ட அனுமதிச்சீட்டுடைய ஒவ்வொருவரும் இதற்கான இரண்டாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டிருக்கும் வீதங்களிலான ஒரு கட்டணத்தை முறைச் சந்தையின் வளவிலுள்ள விற்பிடத்தை அல்லது வெற்றிடத்தைப் பயன்படுத்துவதற்காகக் கொடுத்தல் வேண்டும்.

4. மூன்றும் துணைவிதியின் கீழ் கொடுக்கப்படற்பாலதான கட்டணங்களை சேகரித்தற்கென அலுவலர் ஒருவரை சபையானது வேலையில் அமர்த்தாவிட்டால் அது கட்டணங்கள் சேகரித்தற்கான உரிமையை—

(அ) தனிப்பட்ட உடன்படிக்கை மூலம், அல்லது

(ஆ) கேள்விப்பத்திரங்களைக் கோருதல் மூலம், அல்லது

(இ) அந்த உரிமையை ஏலத்தில் விடல் மூலம் அங்கீகரிக்கப்பட்ட ஆளொருவருக்குக் குத்தகைக்கு விடலாம்.

(5) (1) இரண்டாம் துணைவிதியின்கீழ் வழங்கப்பட்டுள்ள அனுமதிச் சீட்டுடையார் எவரும் முறைச்சந்தையில் ஏதேனும் இறைச்சியை விற்றலோ விற்பனைக்கு வெளிக்காட்டி வைத்தலோ ஆகாது. ஆயின் எப்படியிருப்பினும் அத்தகைய பொருள் அல்லது பண்டம் அதற்கென நிர்வாக அலுவலரால் வழங்கப்படும் சிறப்பனுமதிச் சீட்டின் அதிகாரத்தின் கீழ் விற்கப்படலாம் அல்லது விற்பனைக்கு வெளிக்காட்டி வைக்கப்படலாம்.

(2) அத்தகைய அனுமதிச்சீட்டை வழங்குவதற்குப் போதிய நல்ல காரணங்கள் இருக்கின்றனவென்று நிர்வாக அலுவலர் திருப்திப்பட்டாலொழிய சிறப்பனுமதிச்சீட்டெதுவும் வழங்கப்படலாகாது.

6. இரண்டாம் துணைவிதியின்கீழ் வழங்கப்பட்ட அனுமதிச்சீட்டையுடையவர்களுக்கிடையிலும் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அவர்களின் வேலையாட்களுக்குமிடையிலும், அவர்களுக்கும், பொதுமக்களுக்குமிடையிலும் எழும் சந்தையைப் பயன்படுத்தல்பற்றிய பிணக்குகள் எவையும் முறைச்சந்தையின் வளவினுள் கடமைசெய்து கொண்டிருக்கும் நிர்வாக அலுவலரால் அதிகாரம் அளிக்கப்பட்ட எவரேனும் அலுவலரால் தீர்த்துவைக்கப்படலாம்.

7. முறைச்சந்தையின் வளவில் அமைதியானது அந்நோக்கத்திற்கெனச் சபையால் நியமிக்கப்பட்டவரும் சந்தையின் வளவில் கடமை புரிந்துகொண்டு இருப்பவருமான ஓர் அலுவலரால் நிலைநாட்டப்படல் வேண்டும்.

8. பொருட்கள் வாங்குவதற்கென அல்லது அவற்றை விற்றற்கென சந்தைக்கு வரும் ஒவ்வோர் ஆளும் ஏதேனும் பிணக்கைத் தீர்த்து வைக்கும் முகமாக அல்லது அமைதியை நிலைநாட்டுவதற்காக சபையின் அலுவலர் ஒருவரால் அல்லது பொலிசு அலுவலவர் ஒருவரால் இடப்படும் சட்டப்படியான கட்டளைக்கு இணங்கி ஒழுகுதல் வேண்டும்.

9. முறைச்சந்தையின் வளவினுள் எவரும்—

(அ) சமையல் வேலை எதுவும் மேற்கொள்ளலாகாது ; அல்லது

(ஆ) குழப்பமான முறையில் நடந்துகொள்ளல் ஆகாது, அல்லது சத்தம் செய்தல் ஆகாது, அல்லது குழப்பம் செய்தல் ஆகாது, அல்லது வேறெவரேனும் ஆளுடன் சண்டையிடல் ஆகாது, அல்லது மானபங்கமான முறைகேடான அல்லது இடக்கம் மொழிகள் பேசுதல் ஆகாது ; அல்லது

(இ) சந்தை வளவைவிட்டு வெளியேறும்படி சபையின் அலுவலர் ஒருவரால் அல்லது கிராமசேவகர் ஒருவரால் அல்லது பொலிசு அலுவலர் ஒருவரால் அல்லது நிர்வாக அலுவலரின் அதிகாரத்தின் கீழ் செயற்படும் எவரேனும் ஆளால் கட்டளையிடப்பட்டதன் பின்னர் அவர் அவ்வாறு நிற்பதற்குத்திருப்தியான காரணம் காட்டமுடியாத நிலையில் அங்கு நிற்றலோ அங்குமிங்கும் அலைதலோ கூடாது ; அல்லது

(ஈ) எவ்வகையான சூதாட்டத்திலும் ஈடுபடலாகாது.

10. (1) நிர்வாக அலுவலர் அல்லது சௌக்கிய வைத்திய உத்தியோகத்தர் அல்லது நிர்வாக அலுவலரின் அதிகாரத்தின்கீழ் செயற்படும் பொது சௌக்கியப் பரிசோதகர் எவரும் முறைச் சந்தையின் வளவினுள் விற்பனைக்கென வெளிக்காட்டி வைக்கப்பட்டிருப்பதும் உடனலத்திற்குகந்ததல்லவென்று அவர்க்குத் தோன்றுவதுமான ஏதேனும் பொருளைப் பரிசோதித்தலும் அவற்றைக் கைப்பற்றுதலும் அவர்க்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(2) முதலாம் பந்தியின்கீழ் கைப்பற்றப்பட்ட பொருள் என்று, உடனலத்திற்குகப்பில்லாததென்று அரசாங்க மருத்துவ அலுவலரால் சான்றளிக்கப்பட்டு இருக்கின்றவிடத்து அத்தகைய பொருளானது எவரின் உரிமையிலிருந்து அது கைப்பற்றப்பட்டதோ அவருக்கு நட்டஈடு எதுவும் கொடுக்கப்படாமலே அழிக்கப்படலாம்.

11. (1) முறைச்சந்தையைக் கண்காணிப்பதற்கென நிர்வாக அலுவலரால் நியமிக்கப்பட்ட அலுவலர் ஒருவர் அல்லது ஆள் ஒருவர் அவரது கடமைகளைப் புரியும்போது அவரை எவரும் மறிக்கவோ, தடுக்கவோ, தடைசெய்யவோ, அவருக்குத் தொந்தரவு கொடுக்கவோ கூடாது.

(2) கட்டணங்களைச் சேகரிப்பதற்கெனச் சபையால் நியமிக்கப்பட்ட ஒரு ஆள் அல்லது (அத்தகைய கட்டணம் சேகரிப்பதற்கான உரிமை குத்தகைக்கு விடப்பட்டிருக்கின்றவிடத்து) அத்தகைய குத்தகைய எடுப்பவர் தமது கடமையைப் புரியும்போது அவரை எவரும் மறிக்கவோ, தடுக்கவோ, தடைசெய்யவோ, அவருக்குத் தொந்தரவு கொடுக்கவோ கூடாது.

12. ஆளெவரும்—

(அ) முறைச் சந்தை நிகழ்த்தப்படும் நாளுக்கு முந்திய நாளன்று பிற்பகல் 3 மணிக்கு முன்னர் முறைச் சந்தைவளவில் கொட்டில் போடுதலோ கூடாரம் அடித்தலோ, பாய்கள் அல்லது சாக்குகளை இடுதலோ கூடாது, அல்லது

(ஆ) முறைச் சந்தை நிகழ்ந்த நாளுக்கு அடுத்த நாள் காலை 9 மணிக்கும் பின்னர் கொட்டில் எதையும், கூடாரம் எதையும் பாய் எதையும் சாக்கெதையும் அல்லது வேறெந்தப் பொருள் எதையும் சந்தை வளவில் இருக்கவிடுதலாகாது.

13. நிர்வாக அலுவலர் அல்லது நிர்வாக அலுவலரின் அதிகாரத்தின்கீழ் தொழிற்படும் வேறு யாரேனும் சபை அலுவலர் முறைச் சந்தை நிகழ்ந்த நாளுக்கு அடுத்த நாள் 9 மணிக்குப் பின்னர் சந்தை வளவில் கிடைக்கும் எவையேனும் கொட்டில்களை, கூடாரங்களை, பாய்களை, சாக்குகளை அல்லது வேறெவையேனும் பொருட்களை அகற்றுதல் அவர்களுக்குச் சட்டமுறையாதல் வேண்டும்.

14. இந்தத் துணைவிதிகள் எவற்றையேனும் மீறும் ஒவ்வொரு மீறுகையும் 100 ரூபாவிற்கு மிகாத ஒரு குற்றப்பணத்தால் தண்டிக்கப்படற்பாலதாதல் என்பதோடு அத்தகைய மீறுகை தொடர்ந்தும் செய்யப்பட்டு வருகின்றவிடத்து அத்தகைய மீறுகைக்காகத் தகுதிவாய்ந்த நியாயாதிக்கம் கொண்ட நீதி மன்றத்தால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட பின்னர் அல்லது அவ்வாறு மீறுகை செய்யப்படுகின்றது என்பதைக் குறித்துக் கூறும் எழுத்துமூல அறிவித்தலொன்று நிர்வாக அலுவலரால் அல்லது நிர்வாக அலுவலரால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவரால் அத்தகைய மீறுவோருக்கு விடுக்கப்பட்டதன்பின்னர் அத்தகைய மீறுகை தொடர்ந்து செயற்பட்டுவருகின்ற ஒவ்வொரு நாளுக்கும் 25 ரூபாவுக்கும் மிகாத மேலதிகக் குற்றப்பணம் ஒன்றாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

அட்டவணை I

கெக்கிராவைப் பட்டின சபை

கெக்கிராவை திங்கட்கிழமை முறைச்சந்தை

திரு./திருமதி/செல்வி.......................................
என்பவரிடமிருந்து பின்வரும் தொகையைப் பெற்றுக் கொண்டேன்.

| நாளொன்றுக்கு | ரூ. ச. |
|---|---|
| 1. 60 சதுர அடிக்குக்கூடுதலான பரப்பளவைக்கொண்ட விற்பனைக்கூடமொன்றுக்கான கட்டணம் (விற்பனைக்கூட இல.) .. | |
| 2. 60 சதுர அடிக்குக் குறைவான பரப்பளவைக்கொண்ட விற்பனைக்கூடமொன்றுக்கான கட்டணம் (விற்பனைக்கூட இல.) .. | |
| 3. 50 சதுர அடிக்குக் கூடுதலான பரப்பளவைக்கொண்ட தள இடமொன்றுக்கான கட்டணம் .. | |
| 4. 50 சதுர அடிக்குக் குறைவான பரப்பளவைக்கொண்ட தள இடமொன்றுக்கான கட்டணம் .. | |
| 5. இளநீருக்கான அல்லது செவ்விளநீருக்கான அல்லது தேங்காய்களுக்கான கட்டணம் .. .. | |
| 6. வாழைப்பழ விற்பனைக்கான கட்டணம், தொகைப் பிரகாரம் .. .. | |
| 7. காய்கறிகள், பழங்கள் ஆகியவற்றின் விற்பனைக்கான கட்டணம், தொகைப் பிரகாரம் .. | |
| 8. ஏனைய பொருட்களின் விற்பனைக்கான கட்டணம் .. | |
| மொத்தம் ரூபா | |

............ ரூபா............ சதங்களை மட்டும் பெற்றுக்கொண்டேன்.

————————,
சேகரிப்பாளரின் கையொப்பம்.

அட்டவணை II

| | நாளொன்றுக்கு ரூ. ச. |
|---|---|
| 1. 60 சதுர அடிக்குக் கூடுதலான பரப்பளவைக்கொண்ட விற்பனைக்கூடமொன்றுக்கு .. .. | 1 50 |
| 2. 60 சதுர அடிக்குக் குறைவான பரப்பளவைக்கொண்ட விற்பனைக்கூடமொன்றுக்கு .. .. | 1 00 |
| 3. 50 சதுர அடிக்குக் கூடுதலான பரப்பளவைக்கொண்ட தள இடமொன்றுக்கு .. .. | 0 75 |
| 4. 50 சதுர அடிக்குக் குறைவான பரப்பளவைக்கொண்ட தள இடமொன்றுக்கு .. .. | 0 50 |
| 5. ஒவ்வொரு 100 தேங்காய்களுக்கு அல்லது இளநீருக்கு அல்லது செவ்விளநீருக்கு .. .. | 0 50 |
| 6. ஒரு வாழைக்குலையின் மொத்தவிற்பனைப் பெறுமதியின் 5% .. | 5% |
| 7. காய்கறிகளின் அல்லது பழங்களின் மொத்த விற்பனைப் பெறுமதியின் 5% .. .. | 5% |
| 8. வேறெந்தப் பொருட்களுக்கும் .. .. | 0 25 |

4–386—18.04.75 ந் திகதிய வர்த்தமானி இல. 160

---

மாவனெல்லைப் பட்டினம்—பட்டின சபைகள் கட்டளைச் சட்டம்

(256 ஆம் அத்தியாயமான) பட்டினசபைகள் கட்டளைச் சட்டத்தின் 152, 156 ஆகிய பிரிவுகளின் கீழ் மாவனெல்லைப் பட்டின விசேட ஆணையாளரால் ஆக்கப்பட்டதும் அக்கட்டளைச் சட்டத்தின் 153 ம் பிரிவின் கீழ் அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டதுமான துணை விதிகள்.

டீ. இராசேந்திரா,
மேலதிகச் செயலாளர்,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு, 1975.04.08.

கட்டட வரைவுப் படங்களைப் பரிசோதனைசெய்த பரிசீலனை செய்வது சம்பந்தமான துணைவிதிகள்

1. இதனோடுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விகிதங்களுக்கிணங்கத் தீர்மானிக்கப்படும் கட்டணமொன்று புதிய கட்டடங்களுக்காக அல்லது தற்போதுள்ள கட்டடங்களில் மாற்றங்கள் செய்வதற்காக (268 ஆம் அத்தியாயமான) வீடமைப்பு, நகரச் சீர்திருத்தக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் சமர்ப்பிக்கப்படும் வரைவுப் படங்களைப் பரிசோதனை செய்து பரிசீலனை செய்வது சம்பந்தமாகச் செலுத்தப்படல் வேண்டும்.

2. துணைவிதி 1 இன் கீழ்ச் செலுத்தப்படற்பாலதான கட்டணத் தொகை மாவனெல்லைப் பட்டின விசேட ஆணையாளரிடமிருந்து அத்தகைய கட்டணத்திற்கான கோரிக்கையொன்று கிடைக்கப்பெற்றதும், அங்கீகாரத்திற்காக அல்லது சம்மதத்திற்காக விண்ணப்பஞ் செய்யும் நபரினால் செலுத்தப்படல் வேண்டும். அத்துடன் அத்தகைய கட்டணஞ் செலுத்தப்படும்வரை வரைவுப்படமெதுவும் பரிசோதனை செய்யப்படவோ பரிசீலனை செய்யப்படவோ ஆகாது.

அட்டவணை

1. புதிய கட்டடங்களுக்கான அல்லது மேலதிக நிலப்பரப்பு சம்பந்தப்பட்ட தற்போதுள்ள கட்டடங்களுக்கு மாற்றங்கள் செய்வதற்கான வரைவுப் படங்கள்.

| | ரூ. ச. |
|---|---|
| (அ) மொத்த நிலப்பரப்பு 500 சதுர அடிக்கு மேற்படாத விடத்து .. .. .. | கட்டணம் இல்லை |
| (ஆ) மொத்த நிலப்பரப்பு 500 சதுர அடிக்கு மேற்பட்டு ஆனால் 1000 சதுர அடிக்கு மேற்படாதவிடத்து .. | 10 0 |
| (இ) மொத்த நிலப்பரப்பு 1000 சதுர அடிக்கு மேற்பட்டு ஆனால் 1500 சதுர அடிக்கு மேற்படாதவிடத்து .. | 30 0 |
| (ஈ) மொத்த நிலப்பரப்பு 1,500 சதுர அடிக்கு மேற்பட்டு ஆனால் 2,000 சதுர அடிக்கு மேற்படாதவிடத்து .. | 50 0 |
| (உ) மொத்த நிலப்பரப்பு 2000 சதுர அடிக்கு மேற்பட்டு ஆனால் 3000 சதுர அடிக்கு மேற்படாதவிடத்து .. | 100 0 |
| (ஊ) மேலதிக ஒவ்வொரு 1000 சதுர அடிக்கூற்றுக்கு அல்லது அதன் பாகத்துக்கு .. .. | 50 0 |
| 2. மேலதிக நிலப்பரப்புச் சம்பந்தப்படாத தற்போதுள்ள கட்டடங்களில் மாற்றங்கள் செய்வதற்கான வரைவுப்படங்களுக்கு, தற்போதுள்ள நிலப்பரப்பு 500 சதுர அடிக்கு மேற்படுமிடத்து .. .. .. | 10 0 |
| 3. புதிய வரைவுப் படங்கள் எதுவும் சமர்ப்பிக்கப்படாமல், அங்கீகாரத்தைப் புதுப்பிப்பதற்கான விண்ணப்பமொன்றின் விடயத்தில் .. .. .. | 10 0 |

இந்த அட்டவணையில் " நிலப் பரப்பு " என்பது கீழ்தளத்தில் அல்லது வேறெந்த மாடியிலுமுள்ள இடமெனப் பொருள்படும்.

4–387—18.04.75 ந் திகதிய வர்த்தமானி இல. 160

---

# நானாவித அறிவித்தல்கள்

யாழ்ப்பாண மாவட்டம்—வட்டுக்கோட்டைக் கிராமச் சபை

கிராமச்சபைகள் கட்டளைச் சட்டம்

(257 ஆம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச்சட்டம், 38 ம் பிரிவிற்கிணங்க வட்டுக்கிராமசபை இடப்பரப்பினுள் தாபிக்கப்பட்டுள்ளனவும் தாபிக்கப்படுவனவுமான இதனோடுள்ள அட்டவணை I இல் நிரை 1 இன் கீழ்க் குறிப்பிட்டுள்ள உரிமங்களுக்கு அட்டவணையில் நிரை 2 இன் நேராத்த பதிவில் காட்டப்படும் விகிதங்களின் படியான ஒரு உரிமைக்கட்டணத்தையும்.

அதே சட்டம், 39 ம் பிரிவிற் கிணங்க, வட்டுக்கிராமசபை இடப்பரப்பினுள் பயன்படுத்தப்படுவனவும், பயன்படுத்தப்படவிருப்பனவுமான இதனோடுள்ள அட்டவணை 2 இல் நிரை 1 இன்கீழ்க் குறிப்பிட்டுள்ள ஊர்திகளுக்கு அவ்வட்டவணையில் நிரை 2 இன் நேரொத்த பதிவில் காட்டப்படும் விகிதங்களின் படியான ஒரு வரியையும்.

1975 ஆம் வருடத்திற்கு விதித்து அறவிடவேண்டுமென்று இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ச. நிற்சிங்கம்,
கிராமசபை,
வட்டுக்கோட்டை.

கிராமாட்சி மன்ற அலுவலகம்,
வட்டுக்கோட்டை,
1975 ம் ஆண்டு ஏப்ரல் மீ 01 ந் வ.

அட்டவணை I

| | நிரை 1 உரிமத்தின் தன்மை | நிரை 2 தொகை ரூ. ச. |
|---|---|---|
| 1. | சிறிய உணவுச்சாலையொன்று வைத்திருத்தல் .. | 20 0 |
| 2. | பாண்போறணை ஒன்று வைத்திருத்தல் .. | 25 0 |
| 3. | புத்தகச்சாலை ஒன்று வைத்திருத்தல் .. | 30 0 |
| 4. | பலசரக்குக் கடை ஒன்று வைத்திருத்தல் .. | 25 0 |
| 5. | தேனீர்ச்சாலை ஒன்று வைத்திருத்தல் .. | 15 0 |
| 6. | மிதிவண்டிகளைக் பழுதுபார்க்கும் நிலையம் ஒன்றை வைத்திருத்தல் | 15 0 |
| 7. | குளிர்பானம் சோடா சேகரித்து வைத்தல் .. | 50 0 |
| 8. | உருளை வாடகை .. .. .. | 10 0 |
| 9. | கொண்டு திரிந்து விற்பனை செய்தல் .. | 25 0 |
| | அபாயகரமான தொழில்கள் | |
| 1. | மரமரியும் கிடங்கு ஒன்று வைத்திருத்தல் .. | 25 0 |
| 2. | தச்சுத்தொழிற்சாலை ஒன்று வைத்திருத்தல் .. | 50 0 |
| 3. | கொல்லுலை ஒன்று வைத்திருத்தல் .. | 25 0 |
| 4. | மரம் அரியும் ஆலை (இயந்திரம்) .. .. | 75 0 |
| 5. | அரிசி ஆலை ஒன்றை வைத்திருத்தக. (20 குதிரை வேகம்) | 85 0 |
| 6. | அரிசி ஆலை ஒன்றை வைத்திருத்தல். (20 குதிரை வேகத்திற்கு கூட) | 110 0 |
| 7. | மிளகாய் மா அரைக்கும் ; ஆலை 1 அலகுக்கு .. | 15 0 |
| 8. | மிளகாய் மா அரைக்கும் ஆலை 1 அலகுக்கு மேற்பட்டது | 20 0 |
| 9. | அரசாங்க மரக்காலை .. .. | 75 0 |
| 10. | தனிப்பட்டவர் மரக்காலை நடத்தல் .. .. | 50 0 |
| 11. | ஆபரணங்கள் உற்பத்தி செய்யும் பழுதுபார்க்கும் இடமொன்றை வைத்திருத்தல் | 10 0 |
| 12. | றேடியோ திருத்தும் கடை வைத்திருத்தல் .. .. | 25 0 |
| 13. | மின் இணைப்புவேலை செய்தல் .. .. | 15 0 |
| | அருவருப்பான தொழில்கள் | |
| 1. | 3 உறைகளுக்கு மேற்பட்ட பைகளில் பசளை சேகரித்து வைத்திருத்தல் | 50 0 |
| 2. | மரக்கறி வியாபாரம் .. .. | 25 0 |
| 3. | மீன்கடை வைத்திருத்தல் .. .. | 40 0 |
| 4. | இறைச்சி வியாபாரம் செய்தல் .. .. | 50 0 |
| 5. | புகையிலை வியாபாரம் செய்தல் .. .. | 25 0 |
| 6. | 500 தேங்காய்களுக்கு மேல் வியாபாரம் செய்தல் .. | 30 0 |
| 7. | கள்ளுத்தவறணை ஒன்று வைத்திருத்தல் .. | 50 0 |
| | அபாயகரமானதும், அருவருப்பானதுமான தொழில்கள் | |
| 1. | பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம் .. .. | 100 0 |
| 2. | லோன்றி ஒன்றை வைத்திருத்தல் .. .. | 20 0 |
| 3. | சலூன் ஒன்று வைத்திருத்தல் .. .. | 20 0 |
| 4. | வைக்கோல் வியாபாரம் செய்தல் .. .. | 50 0 |
| 5. | செக்குத் தொழில் நடாத்தல் .. .. | 15 0 |

அட்டவணை II

| | நிரை 1 ஊர்தியின் தன்மை | நிரை 2 தொகை ரூ. ச. |
|---|---|---|
| 1. | ஒவ்வொரு துவிச்சக்கரவண்டிக்கும் .. .. | 1 00 |
| 2. | ஒவ்வொரு ஒற்றை மாட்டு வண்டிக்கும் .. | 1 50 |
| 3. | ஒவ்வொரு இரட்டை மாட்டு வண்டிக்கும் .. | 2 50 |
| 4. | இரட்டை மாட்டுவண்டி (வாடகை) .. .. | 5 00 |

4–354—18.04.75 ந் திகதிய வர்த்தமானி இல. 160

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்த மானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்ட வணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித் தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல் களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.

முக்கிய கவனிப்பு.—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

### அட்டவணை—1975

| மாதம் | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | |
|---|---|---|---|---|---|
| ஏப்பிறல் | வெள்ளி | 4.4.75 | 12 மதியம் | வியாழன் | 27.3.75 |
| | வெள்ளி | 11.4.75 | 12 மதியம் | வெள்ளி | 4.4.75 |
| | வெள்ளி | 18.4.75 | 12 மதியம் | வெள்ளி | 11.4.75 |
| | வியாழன் | 24.4.75 | 12 மதியம் | வெள்ளி | 18.4.75 |
| மே | வெள்ளி | 2.5.75 | 12 மதியம் | வியாழன் | 24.4.75 |
| | வெள்ளி | 9.5.75 | 12 மதியம் | வெள்ளி | 2.5.75 |
| | வெள்ளி | 16.5.75 | 12 மதியம் | வெள்ளி | 9.5.75 |
| | வெள்ளி | 23.5.75 | 12 மதியம் | வெள்ளி | 16.5.75 |
| | வெள்ளி | 30.5.75 | 12 மதியம் | வெள்ளி | 23.5.75 |
| யூன் | வெள்ளி | 6.6.75 | 12 மதியம் | வெள்ளி | 30.5.75 |
| | வெள்ளி | 13.6.75 | 12 மதியம் | வெள்ளி | 6.6.75 |
| | வெள்ளி | 20 6.75 | 12 மதியம் | வெள்ளி | 13.6.75 |
| | வெள்ளி | 27.6.75 | 12 மதியம் | வெள்ளி | 20.6.75 |

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1975 ம் ஆண்டு சனவரி மீ 01 ந் உ.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.